


29.12.2025

## 52. கிருபையினால் இருதயம் ஸ்திரப்படுவதே நல்லது!

**இ**வ்வுலகில் வாழும் ஜீவியத்தைக் காட்டிலும், “தேவ கிருபையே” மிகவும் நல்லது! என்றே சங்கீதம் 63:3 அறிவிக்கிறது! துன்பத்தின் ஏற்ற சமயத்தில் தாங்கி உதவிடும் ‘தெய்வ கிருபையிழந்து’ வாழ்வதில் பயன் ஏது? இதையறிந்த அவரது மக்கள் “என் பெலவீனமேயானாலும், எனக்கு பலம் தரும் உமது கிருபை போதும்” என்பர்! (2கொரி.12:9). வாழ்விற்கு கஞ்சி உணவானாலும், பாயில் படுத்தாலும், குடிசையில் வாழ்ந்தாலும் ஒரு பொருட்டல்ல! “உம் கிருபையினாலே” இருதயம் ஸ்திரப்பட்டு வாழ்வதே,

**எம் ஜீவியத்தின் பாக்கியம்! (எபி.13:9).**

**- ரத்னம்**